# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2111/39 - 2019 පෙබරවාරි මස 20 වැනි බදාදා - 2019.02.20

*2111/39 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண, மாகாண சபை**

*2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வட மாகாண வியாபாரப் பெயர்கள் நியதிச்சட்டம்*

*வட மாகாண மாகாண சபையால் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வட மாகாண வியாபாரப் பெயர்கள் நியதிச்சட்டத்திற்கு வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

இ. வரதீஸ்வரன்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வட மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ 9 வீதி,
கைதடி,
2019, பெப்புருவரி 15.

**வட மாகாணத்துக்கான வியாபாரப் பெயர்களைப் பதிவுசெய்தல் திணைக்களமொன்றைத் தாபிப்பதற்காகவும், மாகாண வியாபாரப் பெயர்கள் பதிவாளரை நியமிப்பதற்காகவும், வட மாகாணத்தில் வியாபாரம் கொண்டு நடாத்துகின்ற ஆட்களையும் அவர்களின் வியாபாரப் பெயரையும் பதிவு செய்வதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச்சட்டம். இந்நியதிச்சட்டம், 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவுள்ளது**.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இந் நியதிச்சட்டம் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வட மாகாண வியாபாரப் பெயர்கள் நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வடமாகாணத்தின் ஆளுநர் அதற்குத் தமது சம்மதத்தை அளிக்கக்கூடிய வாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பாகம் I

**வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்தல் திணைக்களமொன்றைத் தாபித்தலும் மாகாண வியாபாரப் பெயர்கள் பதிவாளரை நியமித்தலும்**

*வியாபாராப் பெயர்களைப் பதிவுசெய்தல் திணைக்கள மொன்றைத் தாபித்தல்.*

2. திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக (இதனகத்துப்பின்னர் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வட மாகாணத்தின் வியாபாரப் பெயர்களைப் பதிவுசெய்தல் திணைக்களம் என அறியப்படும் திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*மாகாணப் பதிவாளர் முதலியவர்களை நியமித்தல்.*

3. (1) (இதனகத்துப்பின்னர் "மாகாணப் பதிவாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாகாணப் பதிவாளராக இருப்பதற்கென ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவரே திணைக்களத்தலைவராக இருத்தல் வேண்டும்.

(2) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

(3) மாகாணப் பதிவாளராக நியமிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டத்தை அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர்தொழிற் குழுவின் உயர்தொழிற்சார் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடுகள், திணைக்களப் பணியாட்டொகுதியினரின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பொதுவாக நிறைவேற்றுவதற்காக, பதிவுசெய்யப்பட்ட குழுமங்களின் அல்லது ஆட்களின் மற்றும் அவற்றின் அல்லது அவர்களின் பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயர்களின் இடாப்பொன்றை வைத்திருப்பதற்கும், இந்நியதிச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களைச் சேகரிப்பதற்கும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட எல்லாத் தொகைகளையும் வடமாகாண நிதியத்தினுட் செலுத்துவதற்கும் மாகாணப் பதிவாளர் பொறுப்பாகவிருப்பார்.

பாகம் II

**பதிவுசெய்யப்படவேண்டிய குழுமங்களும் ஆட்களும்**

*பதிவு.*

4. (1) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, குழுமமொன்று அல்லது ஆளொருவர் வடமாகாணத்தினுள் வியாபாரம் கொண்டு நடாத்துவதற்கு விரும்புகின்றவிடத்து, அக்குழுமம் அல்லது அவ்வாள் மற்றும் அக்குழுமத்தின் அல்லது அவ்வாளின் வியாபாரப் பெயர் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒரு குழுமம் அல்லது ஆள், ஒன்றுக்கு மேற்பட்ட வியாபாரப் பெயர்களின்கீழ் வடமாகாணத்தினுள் வியாபாரம் கொண்டுநடாத்துவதற்கு உட்கருதுமிடத்து, அக்குழுமம் அல்லது ஆள் தொடர்பில் தனி வேறான பதிவுகள் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வியாபாரப் பெயர்களுள் ஒவ்வொன்றும், மற்றும் இந்நியதிச்சட்டத்தில் பதிவுபற்றிய ஏதேனும் குறிப்பீடும் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப் படுதலும் வேண்டும்.

5. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய – பதிவுசெய்யப்பட வேண்டிய குழுமங்களும் ஆட்களும்.

(அ) வடமாகாணத்தில் வியாபார இடமொன்றைக் கொண்டுள்ளதும், ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரம் கொண்டு நடாத்துகின்றதுமான ஒவ்வொரு குழுமமும்;

(ஆ) வடமாகாணத்தில் வியாபார இடமொன்றைக் கொண்டுள்ளவரும், ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரம் கொண்டு நடாத்துகின்றவருமான ஒவ்வொரு தனியாளும்;

(இ) ஒன்றில் இந்நியதிச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் அல்லது அதன்பின்னர், திருமணத்தின் விளைவாக அவரது பெயரை மாற்றியுள்ள பெண்ணொருவரின் விடயத்திற்தவிர அவரது அல்லது அதன் பெயரை மாற்றியுள்ள, வடமாகாணத்தில் வியாபார இடமொன்றைக் கொண்டுள்ள ஒவ்வொரு தனியாளும் அல்லது குழுமமும், அல்லது அக்குழுமத்தின் உறுப்பினரொருவரும்; அத்துடன்

(ஈ) வடமாகாணத்தில் வியாபார இடமொன்றைக் கொண்டுள்ளதும், ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரம் கொண்டு நடாத்துகின்றதுமான ஒவ்வொரு கூட்டுத்தாபனமும், இந்நியதிச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

6. (1) பின்வரும் குழுமங்களும் ஆட்களும், வடமாகாணத்தினுள் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும்போது, பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது:- இந்நியதிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படு வதற்குத் தேவைப் படுத்தப்படாத குழுமங்களும் ஆட்களும்.

(அ) தனிப்பட்ட உரிமையாளரின் முழுப்பெயரின்கீழ் மட்டுமே வியாபாரம் கொண்டுநடாத்துகின்ற எவரேனும் தனிப்பட்ட உரிமையாளர்;

(ஆ) வியாபாரப் பெயருடன் எதனையும் சேர்த்தல், அவ்வியாபாரம், வியாபாரத்தின் முன்னைய சொந்தக் காரரொருவரை அடுத்துற்று கொண்டு நடாத்தப்படுகின்றதென வெறுமனே சுட்டிக்காட்டும் போது;

(இ) எல்லாத் தனியாட்களினதும் முழுப்பெயர்களின்கீழ் மட்டுமே வியாபாரம் கொண்டுநடாத்துகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களைக்கொண்ட ஏதேனும் குழுமம்;

(ஈ) பகிரங்க நோக்கத்துக்காக ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டமுறையான அதிகாரி அல்லது வேறு குழு;

(உ) கடனிறுக்கவகையற்ற மரணச்சொத்தின் சாட்டுதல் பெறுநரினால், அல்லது ஏதேனும் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பெறுநரினால் அல்லது முகாமையாளரினால் அல்லது பாதுகாவலரினால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் வியாபாரம்;

(ஊ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களினால் ஆதனத்தின் கொள்வனவு அல்லது வேறு கொள்ளுதல், சொந்தக்காரர்கள் அதன் விற்பனையிலிருந்து எழுகின்ற எவையேனும் இலாபங்களைப் பகிர்ந்தாலுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, வியாபாரமொன்றைக் கொண்டுநடாத்துதலாக அதன் காரணமாகக் கருதப்படுதலாகாது;

(எ) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கம்;

(ஏ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கம்;

(ஐ) (138 ஆம் அத்தியாயமான) தொழிற் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தொழிற்சங்கம்;

(ஒ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும், அதன் பதிவு செய்யப்பட்ட பெயரின்கீழ் வியாபாரம் கொண்டு நடாத்துகின்றதும், வடமாகாணத்தினுள் வியாபாரம் கொண்டு நடாத்துகின்றதுமான ஏதேனும் வெளிநாட்டுக் கம்பெனி; அத்துடன்

(ஓ) அதன் கூட்டிணைப்புப் பெயரின்கீழ் வியாபாரம் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் கம்பெனி.

(2) பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படாதவரும் ஆனால் பதிவுசெய்யப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றவருமான ஆளொருவர், அவ்வாள் அவ்வாறு பதிவுசெய்யப்படும் காலப்பகுதிக்கு இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்தவராதலும் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) ஒரு தனியாளுக்கான அல்லது ஆளுக்கான குறிப்பீடு, முறையே தனியாட்களின் ஒரு வகுப்பையும் அல்லது ஆட்களின் ஒரு வகுப்பையும் உள்ளடக்கும்; அத்துடன்

(ஆ) ஒரு தனியாளின் முழுப்பெயருக்கான குறிப்பீடு-

(i) 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்ட தனியாளொருவரின் விடயத்தில், அத்தனியாளின் தேசிய அடையாள அட்டையில் கூறப்பட்டவாறு அத்தனியாளின் முழுப்பெயருக்கான குறிப்பீடொன்றாகவுள்ளது; அத்துடன்

(ii) அச்சட்டத்தின்கீழ் அடையாள அட்டை வழங்கப்படாத தனியாளொருவரின் விடயத்தில், மாகாணப் பதிவாளருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவுள்ளவாறு அத்தனியாளின் கடவுச்சீட்டில் அல்லது ஆளடையாளம் பற்றிய அத்தகைய வேறு ஒத்த சான்றில் கூறப்பட்டவாறாக அத்தனியாளின் முழுப் பெயருக்கான குறிப்பீடொன்றாகவுள்ளது.

## பாகம் III

### வியாபாரப் பெயர்களைப் பதிவுசெய்தல்

ஒரு புதிய வியாபாரத்தைத் தொடங்குதல் அல்லது வியாபாரப் பெயரிலான மாற்றம்.

7. (1) இந்நியதிச் சட்டம் தொடங்கும் திகதியன்று அல்லது அதற்குப்பின்னர் வியாபாரப் பெயரொன்றின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற, நடாத்துவதற்குத் தொடங்குகின்ற அல்லது அத்தகைய திகதிக்குப் பின்னர் வேறேதேனும் காரணத்துக்காகப் பதிவுக்கு உட்பட்டதாக அல்லது ஆளாக வருகின்ற ஒவ்வொரு குழுமமும் அல்லது ஆளும், பின்வரும் விபரங்களைக் கொண்டுள்ளதும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ளதும் எழுத்திலானதுமான கூற்றொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(அ) வியாபாரமானது எந்த வியாபாரப் பெயரின்கீழ் கொண்டுநடாத்தப்படுகின்றதோ அந்த வியாபாரப் பெயரும் அதன் ஏதேனும் உருப்பெயர்ப்பும்;

(ஆ) வியாபாரத்தின் தன்மை;

(இ) இலங்கையில் பிரதான வியாபார இடம்;

(ஈ) வியாபாரத்தின் நோக்கத்துக்காகப் பேணப்பட்ட ஏதேனும் கிளையலுவலகம், களஞ்சியம் அல்லது குதத்தின் முகவரி;

(உ) வியாபாரம் தொடங்கிய திகதி;

(ஊ) வியாபாரமானது ஒரு தனியாளினால் அல்லது ஒரு குழுமத்தின் பங்காளர்களினால் கொண்டு நடாத்தப்படுமிடத்து (பங்காளர்களுள் எவரும் ஒரு கூட்டுத்தாபனமாக இராதவிடத்து), அத்தகைய தனியாளின் அல்லது அத்தகைய ஒவ்வொரு பங்காளரினதும் பின்வரும் விபரங்கள்:-

(i) தற்போதைய முழுப்பெயர்;

(ii) முன்னைய முழுப்பெயர்;

(iii) பிறந்த திகதி;

(iv) தற்போதைய நாட்டினம், மற்றும் தனது நாட்டினத்தை வெளிப்படுத்தியிராத நாட்டவரல்லாதவரின் விடயத்தில், அவர் பிறந்த நாடு;

(v) வழமையான வதிவிடம்;

(vi) அவர் உரிமையாளராக அல்லது பங்காளராக உள்ள வேறொவ்வொரு வியாபாரத்தினதும் பெயர் மற்றும் அத்தகைய ஏதேனும் வியாபாரத்தின் வியாபாரப் பெயரும் பதிவிலக்கமும்;

(vii) அவர் பணிப்பாளராகவுள்ள ஒவ்வொரு கூட்டுத்தாபனத்தினதும் பெயர்;

(viii) அவரது சொந்தப் பெயரிலாயினுஞ்சரி அல்லது அவரது நியமத்தரின் அல்லது வாழ்க்கைத் துணையின் அல்லது பராயமடையாத பிள்ளைகளின் பெயரிலாயினுஞ்சரி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் இருபத்தைந்து சதவீதத்துக்கு மேற்பட்டதை அவர் எந்தக் கூட்டுத் தாபனத்தில் வைத்திருக்கின்றாரோ அந்தக் கூட்டுத்தாபனம் ஒவ்வொன்றினதும் பெயர்;

(ix) வேறேதேனும் வியாபாரத்தொழிலின் தன்மை;

(எ) எல்லாப் பங்காளர்களும் கூட்டுத்தாபனங்களாகவுள்ள ஒரு கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு குழுமத்தினால் அவ்வியாபாரம் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அத்தகைய ஒவ்வொரு கூட்டுத் தாபனத்தினதும் பின்வரும் விபரங்கள்:-

(i) கூட்டிணைப்புப் பெயர்,

(ii) அது எந்தச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டது,

(iii) கூட்டிணைப்பின் பதிவிலக்கம் ஏதேனுமிருப்பின் அது,

(iv) பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்தின் முகவரி,

(v) அதன் பணிப்பாளர்களுள் ஒவ்வொருவரினதும் பெயரும் நாட்டினமும்,

(vi) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்;

(ஏ) (i) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்காளர்கள் தனியாட்களாகவுள்ள ஒரு குழுமத்தினால் அவ்வியாபாரம் கொண்டுநடாத்தப்படுமிடத்து, (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்கள்; அத்துடன்

(ii) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்காளர்கள் கூட்டுத்தாபனங்களாகவுள்ள ஒரு குழுமத்தினால் அவ்வியாபாரம் கொண்டுநடாத்தப்படுமிடத்து, (எ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்கள்;

(ஐ) ஒரு குழுமத்தின் விடயத்தில், ஒரு பங்காண்மை உடன்படிக்கை எழுத்தில் வடிக்கப்பட்டுள்ளதா வென்பது;

(ஒ) அவ்வியாபாரம் வேறெந்த வியாபாரப் பெயரின்கீழ் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த வேறு வியாபாரப் பெயர்; அத்துடன்

(ஓ) பதிவு செய்யப்பட வேண்டிய குழுமத்தின் அல்லது ஆளின் வர்த்தகப் பணிமனை, கழக அல்லது வர்த்தக ஆணைக்குழு உறுப்பாண்மை தொடர்பான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கூற்று, அத்தகைய தொடங்குகை யிலிருந்து முப்பது நாட்காலப்பகுதியினுள் அல்லது மாகாணப் பதிவாளர் விண்ணப்பத்தின்மீது அனுமதிக்கக்கூடிய அத்தகைய மேலதிகக் காலப்பகுதியினுள் கொடுத்துவப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான கூற்று -

(அ) தனியாளொருவரின் விடயத்தில் அவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்;

(ஆ) ஒரு கூட்டுத்தாபனத்தின் விடயத்தில் அதன் பணிப்பாளரொருவரினால் அல்லது செயலாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒரு குழுமத்தின் விடயத்தில் எல்லாப் பங்காளர்களினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

மாகாணப் பதிவாளர் கூற்றைக் கோப்பிடுதலும் பதிவுச் சான்றிதழை வழங்குதலும் வேண்டும். பெயர்ப் பலகையும் இலக்கமும் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்

8. (1) ஏதேனும் குழுமத்திடமிருந்து அல்லது ஆளிடமிருந்து இந்நியதிச்சட்டத்தினைப் பின்பற்றி அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றைப் பெற்றதன்மேல், மாகாணப் பதிவாளர், இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவற்றைப் பதிவுசெய்வித்தலும் பதிவேட்டில் கோப்பிடுவித்தலும் வேண்டுமென்பதுடன், பதிவுச் சான்றிதழொன்றை அவர் அக்குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு அஞ்சல்மூலம் அனுப்புதலும் வேண்டும் அல்லது அதனிடம் அல்லது அவரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவுச் சான்றிதழ் எக்குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு வழங்கப்படுகின்றதோ அக்குழுமம் அல்லது ஆள், அது பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள், அத்தகைய சான்றிதழை அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அக்குழுமத்தின் அல்லது ஆளின் பிரதான வியாபார இடத்திலும் வேறொவ்வொரு வியாபார இடத்திலும் துலாம்பரமானவோரிடத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு குழுமமும் அல்லது ஆளும் -

(அ) அதன் பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயரும் பதிவுச் சான்றிதழ் இலக்கமும் அவ்வியாபாரம் கொண்டு நடாத்தப்படும் ஒவ்வோரிடத்தினதும் வெளிப்புறத்தில் துலாம்பரமானவோரிடத்தில் இலகுவாக வாசிக்கத்தக்க எழுத்துக்களில் நிறப்பூச்சிடப்படுவதனை அல்லது பொருத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(ஆ) பின்வருவனவற்றை அதன் கடிதத்தலைப்புக்களில் வெளிக்காட்டுதல் வேண்டும்:-

(i) ஒரு தனியாளினால் அல்லது ஒரு குழுமத்தின் பங்காளர்களினால் (பங்காளர்களுள் எவரும் ஒரு கூட்டுத்தாபனமாகவிராதவிடத்து) கொண்டு நடாத்தப்படும் ஒரு வியாபாரத்தின் விடயத்தில், வியாபாரப் பெயரும் தனியாளின் பெயரும் அல்லது வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற எல்லாப் பங்காளர்களினதும் பெயர்களும், வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கமும் அத்தகைய வியாபாரத்தின் பிரதான இடமும்;

(ii) ஒரு குழுமத்தின் பங்காளர்களினால் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்காளர்கள் ஒரு கூட்டுத்தாபனமாகவிருக்குமிடத்து) கொண்டு நடாத்தப்படும் ஒரு வியாபாரத்தின் விடயத்தில், பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயர், தனியாட்களாகவுள்ள பங்காளர்களின் பெயர் அல்லது பெயர்கள், கூட்டிணைப்புப் பெயர் மற்றும் கூட்டுத்தாபனங்களாகவுள்ள எல்லாப் பங்காளர்களினதும் கூட்டிணைத்தல் விபரங்கள், வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கம் மற்றும் அத்தகைய வியாபாரத்தின் பிரதான இடம்;

(iii) ஒரு கூட்டுத்தாபனத்தினால் கொண்டுநடாத்தப்பட்ட ஒரு வியாபாரத்தின் விடயத்தில், கூட்டிணைப்புப் பெயரும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைத்தல் விபரங்களும், வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கமும் அத்தகைய வியாபாரத்தின் பிரதான இடமும்.

(4) இந்நியதிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு குழுமமும் அல்லது ஆளும் இப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் அல்லது மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரியப்படின், ஆளொவ்வொருவரும், மற்றும் அத்தகைய ஆள் ஒரு குழுமத்தின் பங்காளராகவிருப்பின் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும், மற்றும் கூட்டுத்தாபனமொன்றின் விடயத்தில் அதன் ஒவ்வொரு பணிப்பாளரும் செயலாளரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) ஏதேனும் கூற்றின் பதிவு அல்லது அத்தகைய பதிவின் சான்றிதழ், அத்தகைய கூற்றிலுள்ள விபரங்களின் உண்மையான தன்மையின் முதற்றோற்றச் சான்றாக அல்லது வேறுவகையாக, அத்தகைய விபரங்களை அல்லது கூற்றைக் கொடுத்துதவுகின்ற ஆளுக்கெதிராகத்தவிர, பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது.

சுட்டியானது வைத்திருக்கப் படுதல் வேண்டும்.

9. பதிவு அலுவலகங்களுள் ஒவ்வொன்றிலும், மாகாணப் பதிவாளர், பதிவின் தொடரிலக்கத்துடன் சேர்த்து இந்நியதிச் சட்டத்தின்கீழ் அவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட குழுமங்களினதும் ஆட்களினதும் எல்லா வியாபாரப் பெயர்களும் பற்றிய சுட்டியொன்றையும், பிரதான அலுவலகத்தில் வடமாகாணம் பூராகவும் ஒவ்வோர் அலுவலகத்திலும் அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட குழுமங்களினதும் ஆட்களினதும் எல்லா வியாபாரப் பெயர்களும் பற்றிய பொதுவான சுட்டியொன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

வெளிநாட்டு முதல்வர் அல்லது வெளிநாட்டுத் தொகுதியினர் சார்பில் செயலாற்றுகின்ற வடமாகாணத்திலுள்ள குழுமம் அல்லது ஆள்.

10. (1) ஒரு வெளிநாட்டு முதல்வரின் வியாபாரத்தினது பொது நோக்கத்துக்காக ஒரு வியாபாரப் பெயரின் கீழாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, அத்தகைய வெளிநாட்டு முதல்வரின் சார்பில் செயலாற்றுகின்ற வடமாகாணத்தினுள்ளான ஏதேனும் குழுமம் அல்லது ஆள், இந்நியதிச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், 7 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் விபரங்களுடன் சேர்த்து, அத்தகைய ஒவ்வொரு வெளிநாட்டு முதல்வர் தொடர்பிலும் பின்வரும் விபரங்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(அ) வியாபாரப் பெயரும் முகவரியும், அவ்வெளிநாட்டு முதல்வரின் வியாபாரத்தின் தன்மையும்; அத்துடன்

(ஆ) வடமாகாணத்தினுள்ளான அக்குழுமம் அல்லது ஆள் அத்தகைய வெளிநாட்டு முதல்வருக்காக எத்திகதியன்று செயலாற்றுவதற்குத் தொடங்கியதோ அல்லது தொடங்கினாரோ அத்திகதி.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு குழுமத்தின் அல்லது ஆளின் வியாபாரம், ஒரு வெளிநாட்டு முதல்வரின் சார்பில் அல்லது ஒரு வெளிநாட்டுத் தொகுதியினரின் சார்பில் செயலாற்றுவதனை முழுமையாக அல்லது பிரதானமாகக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள், (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான விபரங்களைக் கொடுத்துதவுதலுடன் சேர்த்து, சொல்லப் பட்ட குழுமம் அல்லது ஆள் எந்த வெளிநாட்டு முதல்வருக்காக அல்லது வெளிநாட்டுத் தொகுதியினரின் உறுப்பினருக்காகப் பொதுவாக வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்றதோ அல்லது கொண்டு நடாத்துகின்றாரோ அந்த வெளிநாட்டு முதல்வர் அல்லது அந்த வெளிநாட்டுத் தொகுதியினரின் உறுப்பினர் தொடர்பாகப் பின்வரும் விபரங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(அ) எங்கேனும் அமைந்துள்ள வியாபாரத்தின் பிரதான அலுவலகத்தின் அமைவிடம்;

(ஆ) வியாபாரம் தொடங்கிய திகதி;

(இ) வடமாகாணத்தினுள், வியாபார இடம் ஏதேனுமிருப்பின் அது;

(ஈ) ஓர் உரிமையாளராக அல்லது பங்காளராகவுள்ள எவரேனும் தனியாளின் விடயத்தில்–

(i) முழுமையாகத் தற்போதைய பெயர்;

(ii) நாட்டினம்; அத்துடன்

(iii) வழமையான வதிவிடம்;

(உ) ஓர் உரிமையாளராக அல்லது பங்காளராகவுள்ள ஏதேனும் கூட்டுத்தாபனத்தின் விடயத்தில்–

(i) கூட்டிணைப்புப் பெயர்;

(ii) அக்கூட்டுத்தாபனம் எச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதோ அச்சட்டம்; அத்துடன்

(iii) அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட பிரதான அலுவலகம்.

(3) மாகாணப் பதிவாளர், வடமாகாணத்தினுள் வியாபாரம் கொண்டுநடாத்துகின்ற இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு, அறிவித்தலில் தரப்பட்டுள்ள காலத்தினுள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக ஒரு வெளிநாட்டு முதல்வர் அல்லது ஒரு வெளிநாட்டுத் தொகுதியினரின் உறுப்பினர் சம்பந்தமான விபரங்களைக் கொடுத்துதவும்படி அறிவிக்கலாம்.

(4) இப்பிரிவில் –

"வெளிநாட்டு முதல்வர்" என்பது, இலங்கைக்கு வெளியே வியாபாரம் கொண்டுநடாத்துகின்ற ஒரு குழுமம் அல்லது ஆள் என்று பொருளாகும்; அத்துடன்

"வெளிநாட்டுத் தொகுதியினர்" என்பது, ஒரு வெளிநாட்டுக் கூட்டுத்தாபனத்தைக் கொண்டுள்ள வெளிநாட்டு முதல்வர்களின் தொகுதியென்றும் அதன் துணைநிலைக் கம்பெனிகளுள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவையென்றும், அல்லது ஒரு வெளிநாட்டுக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துணைநிலைக் கம்பெனிகளென்றும் பொருளாகும்.

*பிரசையல்லாத தனியாளொருவர் முதலியவர்களினால் கொடுத்துதவப்பட வேண்டிய விபரங்கள்.*

11. (1) ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வடமாகாணத்தினுள் வியாபாரம் கொண்டுநடாத்துவதற்கு நாடுகின்ற இலங்கைப் பிரசையல்லாத எவரேனும் தனியாள் அல்லது பங்காளர்களுள் ஒருவர் பிரசையல்லாதவராக வுள்ள ஏதேனும் குழுமம் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்புக் குழு, இந்நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் கொடுத்துதவப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கூற்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தனியாளின், குழுமத்தின் அல்லது கூட்டிணைப்புக் குழுவின் வியாபாரம், அத்தகைய தனியாளின், குழுமத்தின் அல்லது கூட்டிணைப்புக் குழுவின் பெயரில், உள்நாட்டு முகாமையாளர் எனக் கருதப்பட வேண்டியவரும் இலங்கைப் பிரசையாகவுள்ளவரும் இலங்கையில் வதிபவராகவுள்ளவருமான ஆளொருவரினால் வடமாகாணத்தினுள் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய உள்நாட்டு முகாமையாளர் இந்நியதிச்சட்டத்தின்கீழ் தனியாள், குழு அல்லது கூட்டிணைப்புக் குழுவைச் சார்ந்த எல்லாக் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு நேரடியாகப் பொறுப்பாதலும் வேண்டும்.

*தடை செய்யப் பட்ட வியாபாரப் பெயர்.*

12. குழுமமெதுவும், தனியாளெவரும் அல்லது கூட்டுத்தாபனமெதுவும், பின்வருவனவற்றைக் கொண்டுள்ள வியாபாரப் பெயரின்கீழ் வடமாகாணத்தினுள் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துதலாகாது:-

(அ) பின்வரும் சொற்களைக் கொண்டது -

(i) "சனாதிபதி", "சனாதிபதிசார்", "தேசிய", "அரச" அல்லது "இலங்கை" அல்லது மாகாணப் பதிவாளரின் அபிப்பிராயத்தில் சனாதிபதியின் ஆதரவளிப்பை, அல்லது அரசாங்கம், ஏதேனும் அமைச்சு அல்லது திணைக்களம், அல்லது மாகாண அமைச்சு அல்லது அதன் திணைக்களத்துடனான ஏதேனும் தொடர்பைக் குறிப்பாகக் கூறுகின்றது, அல்லது குறிப்பாகக் கூறக்கூடியது;

(ii) "மாநகர" அல்லது "கூட்டிணைக்கப்பட்ட" அல்லது "கம்பெனி" அல்லது அதன் சுருக்கீடு, அல்லது மாகாணப் பதிவாளரின் அபிப்பிராயத்தில் ஏதேனும் மாநகரசபைப் பிரதேசம் அல்லது வேறு உள்ளூரதிகாரசபை அல்லது பாராளுமன்றச் சட்டத்தினால், மாகாண சபையின் நியதிச்சட்டத்தினால் அல்லது வேறுவகையாகக் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் சங்கம் அல்லது குழுவுடனான தொடர்பைக் குறிப்பாகக் கூறுகின்றது அல்லது குறிப்பாகக் கூறக்கூடியது; அல்லது

(iii) "கூட்டுத்தாபனம்" அல்லது "சங்கம்";

(ஆ) அது எந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுமோ அந்நோக்கம், அதன் தன்மை காரணமாக ஒழுக்கத்துக்கு அல்லது பொது அமைதிக்கு முரணாகவிருப்பின் மற்றும் ஏதேனும் சமுதாயத்தின் மத அல்லது இன உணர்ச்சிகளுக்குத் தீங்குவிளைவிக்கக்கூடியதாகவிருப்பின் அல்லது அப்பெயரினால் இனங்காணப்பட்ட வர்த்தகத்தின் அல்லது வியாபாரத்தின் தன்மை பற்றி வர்த்தக அல்லது வியாபாரத் தொகுதியினரை அல்லது பொதுமக்களைப் பிழைவழியுகக்கூடியதாக விருப்பின்;

(இ) அத்தகைய வியாபாரப் பெயரின் மொழிபெயர்ப்பாகவுள்ளது;

(ஈ) விரும்பத்தகாததாகவுள்ளது;

(உ) வேறேதேனும் பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயரை அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்தின் அல்லது வரையறுக்கப்பட்ட பங்காண்மையின் பெயரை ஒத்ததாகவுள்ளது; அல்லது

(ஊ) பதிவுக்காக ஏற்றுக்கொள்ளப்படாதிருக்கும்படி அமைச்சர் வர்த்தமானியிலான அறிவித்தல்மூலம் மாகாணப் பதிவாளரைப் பணித்துள்ள ஒரு வகையினதான பெயராகவுள்ளது.

*வியாபாரப் பெயர்களை ஒதுக்கி வைத்தல்.*

13. (1) மாகாணப் பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மூலம் குழுமமொன்று அல்லது ஆளொருவர், அக்குழுமத்தின் அல்லது ஆளின் உத்தேசிக்கப்படும் பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயராகப் பெயரொன்றை உரிய கட்டணத்துடன் ஒதுக்கிவைக்கும்படி விண்ணப்பிக்கலாம்.

(2) மாகாணப் பதிவாளர் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, விண்ணப்பமானது நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்றதென மாகாணப் பதிவாளர் திருப்திப்பட்டால் மட்டுமே (1) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றை அங்கீகரிக்கலாம்.

(3) மாகாணப் பதிவாளர், பின்வருமாறு திருப்திப்படின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயரொன்றை ஒதுக்கி வைப்பதற்கான விண்ணப்பமொன்றை அங்கீகரிப்பதற்கு மாகாணப் பதிவாளர் மறுத்தல் வேண்டும்:-

(அ) வட மாகாணத்தினுள் சட்டவிரோதமான நோக்கமொன்றுக்காக அல்லது பொதுமக்களின் அமைதி, நல்வாழ்வு அல்லது ஒழுங்கமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படவுள்ளவொரு வியாபாரத்துக்காக அப்பெயர் பயன்படுத்தப்படக்கூடியதாகவுள்ளது;

(ஆ) அவ்வியாபாரப் பெயர் பதிவுசெய்யப்படுதல் தேசியப் பாதுகாப்புக்கு அல்லது நலனுக்கு முரணாக வுள்ளது.

(4) ஒரு பெயரை ஒதுக்கிவைப்பதற்கான விண்ணப்பமொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படுமிடத்து, மாகாணப் பதிவாளர், உத்தேசிக்கப்படும் பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயரை இரண்டுமாதகாலப் பகுதிக்கு ஒதுக்கிவைத்தல் வேண்டும்.

14. (1) ஏதேனும் குழு அல்லது எவரேனும் ஆள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட விபரங்களுள் எவற்றிலும் மாற்ற மொன்று செய்யப்படும் அல்லது ஏற்படும்போதெல்லாம், அத்தகைய குழுமம் அல்லது ஆள், கடைசியாக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழுடன் அல்லது அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சேர்த்து, மாற்றத்தின் தன்மையுடனும் திகதியுடனும், அத்தகைய மாற்றம் எந்த விபரத்தில் செய்யப்பட்டுள்ளதோ அந்த ஒவ்வொரு விபரத்தையும் குறித்துரைத்து, 7 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட புதிய கூற்றொன்றை இணைப்பிரதிகளில் கொடுத்துதவுதல் வேண்டும். விபரங்கள் பற்றிய கூற்றிலான மாற்றங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கூற்றொன்று, அத்தகைய மாற்றத்திலிருந்து முப்பது நாட்காலப்பகுதியினுள் கொடுத்துதவப்படுதல் வேண்டுமென்பதுடன்,

(அ) ஒரு தனியாளின் விடயத்தில் அவரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்;

(ஆ) ஒரு கூட்டுத்தாபனத்தின் விடயத்தில் அதன் பணிப்பாளரினால் அல்லது செயலாளரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்;

(இ) ஒரு குழுமத்தின் விடயத்தில் எல்லாப் பங்காளர்களினாலும் அல்லது எவரேனுமொரு பங்காளரி னால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்; இப்பட்சத்தில் அத்தகைய கூற்று, அப்பங்காளரினால் சத்தியஞ்செய்யப்பட்ட சத்தியக்கடதாசியொன்றின்மூலம் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(3) புதிய பங்காளரொருவர் ஒரு குழுமத்தினுட் பிரவேசித்தமையிலிருந்து விபரங்களிலான ஏதேனும் மாற்றம் எழுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான கூற்று ஒவ்வொரு பங்காளரினாலும், அத்தகைய புதிய பங்காளருட்பட, கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) ஒரு குழுமத்தின் எவரேனும் பங்காளர் தொடர்பில் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (எ) என்னும் பந்தியின்கீழ் கொடுத்துதவப்பட்ட விபரங்களில் ஏதேனும் மாற்றம் எழுகின்றவிடத்து, அத்தகைய கூற்று அப்பங்காளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) ஆளொருவர் குழுமமொன்றின் பங்காளராக இல்லாதொழிவதன்மூலம் விபரங்களிலான ஏதேனும் மாற்றம் எழுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழான கூற்று ஒன்றில்,

(அ) தொடர்ந்திருக்கும் பங்காளர்களுள் ஒவ்வொருவரினாலும் பங்காளராக இல்லாதொழிகின்ற ஆளினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) ஒவ்வொரு தொடர்ந்திருக்கும் பங்காளரினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; ஆயின், கூற்றானது, விதித்துரைக்கப்பட்டவாறாகச் சத்தியக்கடதாசியொன்றின் மூலம் கையொப்பமிடுநர் களுள் ஒவ்வொருவரினாலும் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) பங்காளராக இல்லாதொழிகின்ற ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; ஆயின், கூற்றானது, விதித்துரைக்கப்பட்டவாறாகச் சத்தியக்கடதாசியொன்றின் மூலம் அவரினால் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் கூற்றை உறுதிசெய்தலும், வெளிப்படுத்துநர் தவிர்ந்த வேறு எவரேனுமாள் பங்காளராகவுள்ளார் அல்லது பங்காளராக இல்லாதொழிந்துள்ளார் எனக் கூறுகின்றதும், அல்லது எவரேனும் ஆள் பங்காளராகவுள்ளார் அல்லது பங்காளராக இல்லா

தொழிந்துள்ளார் எனக் கூறாதுவிடுவதுமான ஏதேனும் சத்தியக்கடதாசி, பங்காளரொருவரென்ற முறையில் அத்தகைய வேறு ஆளின் பொறுப்பு அல்லது பொறுப்பின்மை தொடர்பில் அவருக்கான அல்லது அவருக்கெதிரான சான்றாகவிருத்தலாகாது.

(7) இப்பிரிவில் செய்வதற்குக் கருதப்பட்ட விபரங்களிலான மாற்றம், வியாபாரத்தை இடையீடின்றித் தொடரும் வகையில் எல்லாப் பங்காளர்களினதும் உடனிகழ்கின்ற இல்லாதொழிப்பையும் புதிய பங்காளர்களைச் சேர்த்தலையும் உள்ளடக்கும்.

(8) சத்தியக் கடதாசி மூலம் உறுதிசெய்யப்படுதலை தேவைப்படுத்துகின்ற இப்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் கூற்றிலுள்ள ஏதேனும் விபரம், பதிவுக்கு முன்னர் மேற்கொண்டு நுண்ணாய்வு செய்யப்படுவது தேவையாகவுள்ளதென மாகாணப் பதிவாளர் அபிப்பிராயப்படுமிடத்து, நுண்ணாய்வுக்கமைய அவர் அக்கூற்றை ஏற்றுக்கொள்ளலாமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக வேறெவரேனுமாளிடமிருந்து எவையேனும் முக்கியமான விபரங்கள் பற்றி மேலதிக எண்பிப்பையும் கோரலாம்; அத்துடன் அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையையும் நடாத்தலாம்.

(9) மாகாணப் பதிவாளர், முறையான விசாரணையின்பின்னரும், சொல்லப்பட்ட கூற்றிலுள்ள விபரங்களுக்கு அவசியமானவிடத்து அத்தகைய கூற்றின் அவசியமான நிவர்த்தியைச் செய்தும், நிவர்த்தி செய்யப்பட்டவாறாக அத்தகைய கூற்றைப் பதிவுசெய்யலாம்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட விசாரணையை அடுத்துப்பின்னர் மாகாணப் பதிவாளர் ஏதேனும் கூற்றைப் பதிவுசெய்வதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பினால் இன்னலுற்ற ஆள், அத்தகைய மறுப்பு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பதுநாட் காலப்பகுதியினுள் வடமாகாணத்துக்காக இவ் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், செயலாளர் முறையான விசாரணையின் பின்னர் தகுதியானதென அவர் கருதுகின்றவாறாக அவரது முடிபைச் செய்தலும் வேண்டும்.

பதிவை மறுப்பதற்கான தத்துவம்.

15. (1) மாகாணப் பதிவாளர், வியாபாரப் பெயரின் பாவனை அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்துக்கு முரணாகவுள்ளது அல்லது அதன் பாவனை இந்நியதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் தடை செய்யப்பட்டதாகவுள்ளது எனத் திருப்திப்படின், ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் குழுமத்தை அல்லது எவரேனும் ஆளைப் பதிவுசெய்வதற்கு மறுக்கலாம்.

(2) இந்நியதிச் சட்டத்தின்கீழ் வியாபாரப் பெயரொன்றைப் பதிவுசெய்தல், அத்தகைய பதிவுக்குப் புறம்பாக அதன் பாவனை தடைசெய்யப்படக்கூடியதாகவிருப்பின் அப்பெயரின் பாவனையை அதிகாரமளிக்கின்றதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

பதிவை முடிவுறுத்துவதற்கான தத்துவம்.

16. (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, மாகாணப் பதிவாளர், பதிவு செய்வதற்கான மறுப்பு இந்நியதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எந்த ஏதுவின்மீது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் ஏதுவின்மீது வியாபாரப் பெயரொன்றின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் குழுமத்தின் அல்லது எவரேனும் ஆளின் பதிவை முடிவுறுத்தலாம்.

(2) வியாபாரப் பெயரை மாற்றுவதற்கு மாகாணப் பதிவாளருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவுள்ள வழிமுறைகள் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் எடுக்கப்படுதல் வேண்டுமெனக் குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு அறிவித்து, அவ்வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு மாகாணப் பதிவாளர் பதிவஞ்சலிலான அத்தகைய அறிவித்தலை அனுப்பியிருந்தாலொழிய, (1) ஆம் உட்பிரிவின்கீழான பதிவின் முடிவுறுத்தலெதுவும் செய்யப்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வியாபாரப் பெயரை மாற்றுவதற்கு மாகாணப் பதிவாளருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்குக் குழுமம் அல்லது ஆள் தவறியுள்ளவிடத்து, மாகாணப் பதிவாளர், அக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவை முடிவுறுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றலாம்.

17. (1) இந்நியதிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள், ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தாதொழிந்துள்ளதாயின் அல்லது கொண்டு நடாத்தாதொழிந்துள்ளாராயின், அக்குழு அல்லது ஆள் அவ்வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தாதொழிந்துள்ளது அல்லது கொண்டு நடாத்தாதொழிந்துள்ளார் என விதித்துரைக்கப் பட்ட படிவத்திலான கூற்றொன்றை மாகாணப் பதிவாளருக்கு அத்தகைய இல்லாதொழிப்பிலிருந்து மூன்று மாதங்களினுள் அஞ்சலில் அனுப்புதல் அல்லது அவரிடம் ஒப்படைத்தல், அக்குழுமம் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தாதொழிந்த நேரத்தில் அதில் பங்காளர்களாகவிருந்த ஆட்களின் அல்லது தனியாளின் அல்லது அவர் இறந்திருப்பின் அவரது தனிப்பட்ட பிரதிநிதியின் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தின் விடயத்தில் அதன் ஒவ்வொரு பணிப்பாளரினதும் அல்லது செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

இல்லாதொழிப்புப் பற்றிய அறிவித்தலும் இடாப்பிலிருந்து பெயரை அகற்றுதலும்.

(2) ஓராம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட கூற்றை அளித்தல் எந்த ஆளின் கடமையாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் மேற்கூறப்பட்டவாறான அத்தகைய காலத்தினுள் அவ்வாறு செய்வதற்குத் தவறினால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஒரு நீதிவானின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றைப் பெற்றதன்மேல் மாகாணப் பதிவாளர் அத்தகைய கூற்றைக் கோப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவை அகற்றி இடாப்பில் புறக்குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(4) இந்நியதிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தவில்லையென நம்புவதற்கு மாகாணப் பதிவாளருக்கு நியாயமான காரணமுள்ளவிடத்து, அவர் -

(அ) அறிவித்தலொன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் அவரினால் ஆட்சேபனை பெறப்பட்டாலொழிய அக்குழுமத்தின் அல்லது ஆளின் பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்படுமெனக் கூறி அத்தகைய அறிவித்தலை வெளியிடச்செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மேற்கூறப்பட்ட அறிவித்தலின் பிரதியொன்று அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட குழுமத்துக்கும் அல்லது ஆளுக்கும் பங்காளர்களுள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் வதிவிட முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் உடனடியாக அனுப்பப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(5) சொல்லப்பட்ட அறிவித்தலிலிருந்து ஒருமாத காலப்பகுதியினுள் மாகாணப் பதிவாளர் மேற்கூறப்பட்ட அறிவித்தலுக்கான ஆட்சேபனையெதனையும் பெறாதிருப்பின், அவர் அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றலாம்.

18. மாகாணப் பதிவாளர் இந்நியதிச்சட்டத்தின் 15 ஆம், 16 ஆம் அல்லது 18 ஆம் பிரிவுகளின்கீழ் ஏதேனும் குழுமத்தின் அல்லது எவரேனும் ஆளின் ஒரு வியாபாரப் பெயரைப் பதிவுசெய்வதற்கு மறுக்குமிடத்து அல்லது அதன் அல்லது அவரின் பதிவை அகற்றுமிடத்து அல்லது முடிவுறுத்துமிடத்து, அத்தகைய மறுப்பு, அகற்றுகை அல்லது முடிவுறுத்துகை பற்றிய அறிவித்தல் பதிவஞ்சல்மூலம் அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

பதிவை மறுத்தல் அல்லது முடிவுறுத்துதல் பற்றிய அறிவித்தல்.

19. இந்நியதிச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் மாகாணப் பதிவாளரினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிவினால் அல்லது ஆக்கப்பட்ட கட்டளையினால் இன்னலுற்ற எவரேனும் ஆள், அத்தகைய முடிபு எழுத்தில் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பதுநாட்காலப் பகுதியினுள் இவ் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சரின் வடமாகாண அமைச்சுச் செயலாளருக்கு அதற்கெதிராக மேன் முறையீடு செய்யலாம்.

மேன்முறையீடுகள்.

20. (1) ஏதேனும் வியாபாரம் தொடர்பிலான கூற்றொன்றை அல்லது விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தைக் கொடுத்துதவும்படி இந்நியதிச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது ஆள் அவ்வாறு செய்வதில் தவறுகை புரியுமிடத்து, அப்போது, அத்தகைய தவறுகைபுரியுநர் தவறுகையிலுள்ள போது எந்நேரத்திலும் அவரினால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட அவ்வியாபாரம் தொடர்பான ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழான அல்லது அதிலிருந்து எழுகின்ற அத்தவறுகைபுரியுநரின் உரிமைகள், ஒன்றில் வியாபாரப் பெயரில் அல்லது வேறுவகையாக, வழக்கின் மூலம் அல்லது வேறு சட்ட வழக்கு நடவடிக்கைமூலம் வலுவுக்கு இடத்தக்கதாதல் ஆகாது:

தவறுகையிலுள்ள ஆட்களின் இயலாமை.

ஆயின்,-

(அ) இப்பிரிவினால் விதிக்கப்பட்ட இயலாமைக்கெதிரான நிவாரணத்துக்காகத் தவறுகைபுரியுநர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், நீதிமன்றம், அத்தவறுகை தற்செயலாக, அல்லது கவனயீனம் காரணமாக அல்லது வேறேதேனும் போதிய காரணத்தினால் விளைந்ததென, அல்லது வேறு ஏதுக்களின்மீது நிவாரணமளித்தல் நீதியானதும் ஒப்புரவானதுமெனத் திருப்திப்படுவதன்மீது, நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, விண்ணப்பத்துக்கான செலவுதொகைகள் தவறுகைபுரியுநரினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனையின் மேல், மற்றும் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றின்மேல், அத்தகைய நிவாரணத்தை ஒன்றில் பொதுவாக, அல்லது எவையேனும் குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் அளிக்கலாம்; ஆனால் அத்தகைய நிவாரணம், நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறான விண்ணப்பம் பற்றிய அறிவித்தலினது அத்தகைய சேர்ப்பிப்பின் மீதும் அத்தகைய வெளியீட்டின்மீதும் தவிர அளிக்கப்படுதலாகாது, அல்லது ஏதேனும் ஒப்பந்தத்துக்கான திறத்தவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருப்பின் தாம் அவ்வொப்பந்தத்தைச் செய்துகொண்டிருக்கமாட்டாரென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், அந்த ஒப்பந்தம் தொடர்பில் நிவாரணமளிக்கப்படுதலாகாது;

(ஆ) இதன்கண் அடங்கியுள்ளதெதுவும், மேற்கூறப்பட்டவாறான அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் தவறுகைபுரியுநருக்கெதிராக வேறெவரேனும் திறத்தவர்களின் உரிமைகளைப் பங்கப்படுத்தலாகாது.

(இ) அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் வேறெவரேனும் திறத்தவரின் உரிமைகளை வலுவுக்கிடுவதற்கு அத்தகைய திறத்தவரினால் ஏதேனும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை தொடங்கப்படின், இதன்கண் அடங்கியுள்ளதெதுவும், அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் அத்திறத்தவருக்கெதிராக அவருக்கு இருக்கக்கூடிய அத்தகைய உரிமைகளை, எதிர் உரிமைக்கோரிக்கை, எதிரீடு அல்லது வேறுவகையாக அவ்வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் வலுவுக்கிடுவதிலிருந்து தவறுகை புரியுநரைத் தடைசெய்தலாகாது.

(2) இப்பிரிவில், "நீதிமன்றம்" என்பது, ஒப்பந்தமொன்றை வலுவுக்கிடுவதற்குத் தவறுகைபுரியுநரொருவரினால் எந்த நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு அல்லது வேறு சட்ட வழக்குநடவடிக்கை தொடங்கப்படுகின்றதோ அந்த நீதிமன்றம் என்று பொருளாகும்.

மாகாணப் பதிவாளருக்கு விபரங்களைக் கொடுத்துதவுவதற்கான கடமை.

21. (1) மாகாணப் பதிவாளர், அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், எவரேனுமாளை, அத்தகைய ஆள் அல்லது அவர் பங்காளராகவுள்ள குழுமம் இந்நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமா அல்லவாவென்பதை அல்லது பதிவுசெய்யப்பட்ட விபரங்களில் மாற்றமொன்று செய்யப்படவேண்டுமா அல்லவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அவசியமென அவருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய விபரங்களைத் தமக்குக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

(2) மாகாணப் பதிவாளரினால் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அல்லது அவர் அனுமதிக்கக்கூடிய அத்தகைய மேலதிகக் காலப்பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களை வழங்குகின்ற அல்லது போலியானவையாகவுள்ள விபரங்களைக் கொடுத்துதவுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், நீதிமன்றம், தகுதியானதென அது கருதுமிடத்து, கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய விபரங்களை அல்லது அத்தகைய திருத்தப்பட்ட விபரங்களை மாகாணப் பதிவாளருக்குக் கொடுத்துதவும்படி அல்லது கொடுத்துதவச் செய்யும்படி அவ்வாளுக்குக் கட்டளையிடலாம்.

(4) அவ்வாறு கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலிலிருந்து, ஏதேனும் குழுமம் அல்லது ஆள் இந்நியதிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டும், அல்லது பதிவுசெய்யப்பட்ட விபரங்களில் மாற்றமொன்று

செய்யப்படவேண்டுமென மாகாணப் பதிவாளருக்குத் தோன்றினால், அவருக்கு அனுமதிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலத்தினுள் தேவைப்பட்ட விபரங்களைத் தமக்குக் கொடுத்துதவும்படி அக்குழுமத்தை அல்லது ஆளை அவர் தேவைப்படுத்தலாம். ஆனால் இப்பிரிவின்கீழ் பெறப்பட்ட தகவலிலிருந்து இந்நியதிச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுகை கண்டுபிடிக்கப்படுமிடத்து, எக்காலத்தினுள் அக்குழு அல்லது ஆள் மாகாணப் பதிவாளருக்கு இப்பிரிவின்கீழ் விபரங்களைக் கொடுத்துதவும்படி அவரினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றாரோ அக்காலம் முடிவுறுவதற்குமுன்னர் அத்தகைய தவறுகை தொடர்பில் எவரேனுமாளுக்கெதிராக இந்நியதிச் சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கையெதுவும் எடுக்கப்படுதலாகாது.

முன்னைய பதிவு எவ்வாறிருப்பினும், நியதிச்சட்டம் தொடங்கிய பின்னர் கொடுத்துதவப்பட்ட கூற்று.

22. (1) இந்நியதிச்சட்டம் தொடங்கியபின்னர் ஒரு வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரம் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வொரு குழுமமும் அல்லது ஆளும், அத்தகைய குழுமம் அல்லது ஆள் இந்நியதிச்சட்டம் தொடங்கு வதற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்டிருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, இந்நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட கூற்றை இணைப்பிரதிகளில் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கூற்று, இந்நியதிச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து ஆறுமாதகாலப் பகுதியினுள் அல்லது விண்ணப்பத்தின்மீது மாகாணப் பதிவாளர் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலப்பகுதியினுள் கொடுத்துதவப்படுதல் வேண்டுமென்பதுடன்,-

(அ) ஒரு தனியாளின் விடயத்தில் அவரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்;

(ஆ) ஒரு கூட்டுத்தாபனத்தின் விடயத்தில் அதன் பணிப்பாளரினால் அல்லது செயலாளரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்;

(இ) ஒரு குழுமத்தின் விடயத்தில் எல்லாப் பங்காளர்களினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது ஆள், (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான காலப்பகுதியினுள் அல்லது அத்தகைய மேலதிகக் காலப்பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விபரங்கள்பற்றிய கூற்றைக் கொடுத்துதவுவதற்குத் தவறு மிடத்து, அத்தகைய ஆளின் அல்லது குழுமத்தின் பதிவு தவறுகையிலுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவுச் சான்றிதழ் அத்தகைய தவறுகைத் திகதி யிலிருந்து இல்லாததாக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் மாகாணப் பதிவாளர் அத்தகைய நிகழ்வை அவரது இடாப்பில் பதிதலும் வேண்டும்.

(4) பதிவு இல்லாததாக்கப்பட்ட பின்னர் ஏதேனும் குழுமம் அல்லது ஆள் தொடர்ந்து வியாபாரம் கொண்டு நடாத்துமிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படுமிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் உட்பட்டதாதலும் அல்லது ஆளாதலும் வேண்டும்.

விண்ணப்பத்தைக் காலங்கடந்து போனதாகக் கருதுவதற்கு மாகாணப் பதிவாளருக்குள்ள தத்துவம்.

23. (1) குழுமமொன்று அல்லது ஆளொருவர், இந்நியதிச்சட்டத்தின் 7 ஆம், 10 ஆம் அல்லது 14 ஆம் பிரிவுகளின் கீழான கூற்றொன்றைக் கொடுத்துதவியுள்ளதுடன், பதிவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்காக மாகாணப் பதிவாளரினால் எழுத்தில் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய விபரங்களை மாகாணப் பதிவாளருக்குக் கொடுத்துதவுவதற்கு அல்லது மாகாணப் பதிவாளரினால் எழுத்தில் தேவைப் படுத்தப்பட்டவாறான மூல விண்ணப்பத்துக்கு எவையேனும் திருத்தங்களைச் செய்வதற்குத் தவறுமிடத்து, மாகாணப் பதிவாளர், தேவைப்படுத்தப்படுகின்றவாறாக அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவும்படி அல்லது விண்ணப்பத்துக்கு எவையேனும் திருத்தங்களைச் செய்யும்படி அத்தகைய குழுமத்தை அல்லது ஆளைத் தேவைப்படுத்தி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் எழுத்திலான அறிவித்தலொன்றை வழங்கலா மென்பதுடன், அத்தகைய குழுமம் அல்லது ஆள் அத்தகைய அறிவித்தலிலிருந்து ஒருமாத காலத்தினுள் அல்லது மாகாணப் பதிவாளரினால் கொடுக்கப்பட்டவாறான அத்தகைய நீட்டிய காலத்தினுள் அதற்கு இணங்கியொழுகத் தவறினால், மாகாணப் பதிவாளர் அத்தகையவொரு விண்ணப்பம் காலங்கடந்து போனதாகவும் கருதலாம்; அத்துடன் அதன்மீதான பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் தொடர்பாக மேலதிக நடவடிக்கையெதனையும் எடுக்காதுவிடலாம்:

ஆயின், எவ்வாறாயினும், பதிவாளர், அத்தகைய குழுமம் அல்லது ஆள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு மேலதிகக் கட்டணத்தைச் செலுத்தி மூல விண்ணப்பத்தின்மீது அவரிடமிருந்து பெறப்பட்ட அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவினால் அல்லது மூல விண்ணப்பத்துக்குப் பதிவாளரினால் தேவைப்படுத்தப் பட்ட திருத்தங்களைச் செய்தால், காலங்கடந்துபோன அத்தகையவொரு விண்ணப்பத்தின்மீதான மேலதிக நடவடிக்கையை எடுக்கலாம்.

(2) எந்த வியாபாரப் பெயரின் பதிவு இப்பிரிவின்கீழ் காலங்கடந்துபோனதோ அந்த வியாபாரப் பெயரை ஏதேனும் குழுமம் அல்லது ஆள் தொடர்ந்து பயன்படுத்துமிடத்தும், (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்துக்கு இணங்கியொழுகுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திராதவிடத்தும், அத்தகைய குழுமம் அல்லது ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தவறானது தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாள்தொடர்பிலும் ஆயிரம் ரூபாவான தொடர்ந்திருக்கும் குற்றப்பணமொன்றுக்கும் உட்பட்ட தாதலும் அல்லது ஆளாதலும் வேண்டும்.

உள்நாட்டு முகாமையாள ரினால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரம்.

24. (1) பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் தனியாள், அல்லது ஏதேனும் குழுமத்தின் எல்லாப் பங்காளர்களும் அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணிப்பாளர்களும் செயலாளரும் வடமாகாணத்துக்கு வெளியே வதிகின்ற ஏதேனும் விடயத்தில், அவ்வாளின், அக்குழு மத்தின் அல்லது அக்கூட்டுத்தாபனத்தின் வியாபாரம், உள்நாட்டு முகாமையாளரொருவரினால் அத்தனியாளின், அக்குழுமத்தின் அல்லது அக்கூட்டுத்தாபனத்தின் பெயரில் வடமாகாணத்தில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உள்நாட்டு முகாமையாளர், இந்நியதிச்சட்டத்தின்கீழ் அத்தனியாளுக்கு, அக்குழுவுக்கு அல்லது அக்கூட்டுத்தாபனத்துக்குச் சார்ந்தனவாகவுள்ள எல்லாக் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு நேரடியாகப் பொறுப்பாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் வியாபாரத்துக்காக (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி உள்நாட்டு முகாமையாளரெவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லையென மாகாணப் பதிவாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள விடத்து, மாகாணப் பதிவாளர், அவ்வுட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும்படி அத்தகைய தனியாளுக்கு அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர்களுக்கு அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணிப்பாளர்களுக்கும் செயலாளர்களுக்கும் அறிவித்தல் கொடுக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் உள்நாட்டு முகாமையாளரினாலான ஏதேனும் கடப்பாடு தொடர்பிலான தவறுகையின் விடயத்தில், விடயத்துக்கேற்ப, அவர் எந்தத் தனியாளின் பெயரில் வியாபாரத்தை நடாத்தினாரோ அந்தத் தனியாளைப் போன்று, அல்லது குழுமத்தின் பங்காளராயின் அல்லது கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர் அல்லது செயலாளராயின் அவரைப்போன்று அதே பொறுப்புடைமைகளுக்கும், பொறுப்புகளுக்கும், தண்டங்களுக்கும் அமைந்தவராதல் வேண்டுமென்பதுடன், இந்நியதிச்சட்டத்தின் தண்டனை மற்றும் ஏனைய ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "உள்நாட்டு முகாமையாளர்" என்பது, வெளிநாட்டில் வதிகின்றதும் அல்லது வதிபவரும் இலங்கையில் வியாபார இடமொன்றைக் கொண்டுள்ளதுமான அல்லது கொண்டுள்ளவருமான ஏதேனும் குழுமத்துக்காகவும் அல்லது ஆளுக்காகவும் அல்லது அதன் அல்லது அவர்சார்பிலும் எழுத்தில் நியமிக்கப்பட்டவரும் அல்லது அற்றோணித்தத்துவத்தின்கீழ் செயலாற்றுகின்ற வரும் அல்லது வியாபாரத்தை நடாத்துகின்றவரும் காசோலைகளைக்கையொப்பமிடுகின்றவரும் அல்லது உண்மையான முகாமையாளரைப் போன்று செயலாற்றுகின்றவருமான ஆளை உள்ளடக்கும்.

பாகம் IV

**தவறுகள்**

25. இந்நியதிச்சட்டத்தின்கீழ் எந்த வியாபாரப் பெயரின் பதிவு மறுக்கப்பட்டுள்ளதோ அல்லது முடிவுறுத்தப் பட்டுள்ளதோ அந்த வியாபாரப் பெயரைத் தொடர்ந்து பயன்படுத்துகின்ற ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமெனப்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தவறானது தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும் ஆயிரம் ரூபாவான தொடர்ந்திருக்கும் குற்றப்பணமொன்றுக்கும் உட்பட்டதாதலும் அல்லது ஆளாதலும் வேண்டும். மறுக்கப்பட்ட அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ள வியாபாரப் பெயரைப் பயன் படுத்துவதற்கான தண்டம்.

26. இந் நியதிச்சட்டத்தின் கீழ் கொடுத்துவப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கூற்று, அதனைக் கையொப்பமிடும் எவரேனுமாளின் அறிவுக்கெட்டியவரை ஏதேனும் முக்கிய விபரத்தில் போலியானதாகவுள்ள ஏதேனும் விடயத்தைக் கொண்டிருப்பின், அத்தகைய ஆள், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். போலியான கூற்றுக்களுக்கான தண்டம்.

27. ஒரு கூற்றை அல்லது விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தைக் கொடுத்துதவுவதற்கு இந்நியதிச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள், இந்நியதிச்சட்டத்தினால் குறித்துரைக்கப் பட்ட முறையிலும் காலத்தினுள்ளும் அவ்வாறு செய்வதில் தவறுகைபுரிந்தால், அக்குழுமத்திலுள்ள ஒவ்வொரு பங்காளரும் அல்லது அவ்வாறு தவறுகையிலுள்ள ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தவறானது தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாள்தொடர்பிலும் ஆயிரம் ரூபாவான தொடர்ந்திருக்கும் குற்றப்பணமொன்றுக்கும் உட்பட்டதாதலும் அல்லது ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பங்காளர் அல்லது ஆள் எந்த நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்படுதல் வேண்டுமோ அந்த நீதிமன்றம், அவசியமான விடத்து, கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் தேவைப்பட்ட விபரங்கள் பற்றிய கூற்று மாகாணப் பதிவாளருக்குக் கொடுத்துதவப்படுவதற்குக் கட்டளையிடலாம். பதிவிலான தவறுகைக்கான தண்டம்.

28. (1) (அ) வியாபாரப் பெயரொன்று அவ்வாறு பதிவுசெய்யப்படாத போது அதனைப் பதிவுசெய்யப்பட்டதாக அறிந்துகொண்டு பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது அவ்வியாபாரத்துடன் பிழையான அல்லது போலியான இலக்கத்தைப் பயன்படுத்துகின்ற; போலியான கூற்றுக்களுக்கான அல்லது வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்யப்பட்டனவாகப் போலியாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான தண்டம்.

(ஆ) இந்நியதிச்சட்டத்தின் கீழான ஏதேனும் கூற்று அல்லது சத்தியக்கடதாசி போலியானதென அறிந்து கொண்டு அதனைக் காண்பிக்கின்ற அல்லது அளிக்கின்ற அல்லது காண்பிக்கப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்குச் செய்விக்கின்ற,

எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) வியாபாரப் பெயரொன்று இந்நியதிச்சட்டத்தின்கீழ் முறையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதெனப் பொது மக்கள் நம்பும்வகையில் அவர்களைப் பிழைவழியுய்ப்பதற்கு ஆளொருவர் அத்தகைய வியாபாரப் பெயர் சம்பந்தமாகப் "பதிவுசெய்யப்பட்ட" என்ற சொல்லை அல்லது பதிவு பெறப்பட்டுள்ளதென உட்கிடையாகக்கூறுகின்ற ஏதேனும் சுருக்கீட்டை அல்லது எழுத்தை அல்லது சொல்லை அல்லது சொற்களைப் பயன்படுத்தினால், அல்லது வியாபாரப் பெயர் சம்பந்தமாகப் பிழையான அல்லது போலியான பதிவிலக்கத்தைப் பயன்படுத்தினால், அவர், இப்பிரிவின் நோக்கத்துக்காக அவ்வியாபாரப் பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளதெனப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

29. இந்நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்று ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளர், பொது முகாமையாளர், செயலாளர் அல்லது வேறு ஒத்த அலுவலராகவிருந்த அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் நியதிச்சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனங் களினாலான தவறுகள்.

கடப்பாடுடையவராகவிருந்த ஆளொவ்வொருவரும், அத்தவறு அவரது சம்மதமின்றி அல்லது உட்கையின்றிப் புரியப்பட்டுள்ளதென்றும், அப்பதவியிலான அவரது பணிகளின் தன்மையையும் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தாலொழிய, அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்த சில தவறுகளை இணக்குதல்.

30. (1) ஏதேனும் குழுமம் அல்லது ஆள்-

(அ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் மாகாணப் பதிவாளரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான விபரங்கள் பற்றிய ஏதேனும் கூற்றை அல்லது விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தை அல்லது அத்தகைய விபரங்களை மாகாணப் பதிவாளரிடம் கோப்பிடும்படி அல்லது ஒப்படைக்கும்படி அல்லது அவருக்கு அனுப்பும்படி அத்தகைய குழுமத்தை அல்லது ஆளைத் தேவைப்படுத்துகின்ற இந்நியதிச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரிந்துள்ளவிடத்தும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறுகை காரணமாக இந்நியதிச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளவிடத்தும், மாகாணப் பதிவாளர், தகுதியானதென அவர் கருதினால், அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பதிலாக அல்லது அத்தகைய வழக்குநடவடிக்கைகள் ஏலவே தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வழக்குநடவடிக்கைகளை அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு எதிராகத் தொடர்ந்து நடாத்துவதற்குப் பதிலாக, அத்தவறை இணக்குவதில் மாகாணப் பதிவாளர் முறையானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை அத்தகைய குழுமத்திடமிருந்து அல்லது ஆளிடமிருந்து ஏற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் பணத்தொகை வடமாகாண நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தவறை இணக்குவதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய ஒவ்வொரு பணத்தொகையும்பற்றிய பதிவும் மாகாணப் பதிவாளரினால் வைத்திருக்கப்பட்டுப் பேணப்பட்ட இடாப்பொன்றில் பதியப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் தவறை இணக்குவதில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் பணத்தொகையை மாகாணப் பதிவாளர் ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து, அத்தவறு தொடர்பில் அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுதலாகாது, அல்லது ஏலவே தொடுக்கப் பட்டிருப்பின், தொடர்ந்து நடாத்தப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றை இணக்குவதில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, அதன் கொடுப்பனவுக்காக மாகாணப் பதிவாளரினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருமாத காலப்பகுதிக்கு அல்லது மாகாணப் பதிவாளர் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய நீட்டிய காலத்திற்குச் செலுத்தப்படாதிருக்குமிடத்து, மாகாணப் பதிவாளர் அத்தகைய கொடுப்பனவிலான சொல்லப்பட்ட தவறுகையை நீதிவானொருவருக்கு அறிக்கையிடலாமென்பதுடன், அத்தொகை, அது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று அதே முறையில் அத்தகைய தவறுகைதொடர்பில் அத்தகைய குழுமத்திடமிருந்து அல்லது ஆளிடமிருந்து அறவிடப் படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய நீதிமன்றம், தவறுகையிலுள்ள தொகை வடமாகாண நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தலும் வேண்டும்.

## பாகம் V

## பொதுவான ஏற்பாடுகள்

தேடுகையிடுவதற் கான தத்துவம்.

31. (1) மாகாணப் பதிவாளர், இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கென அவரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் தகவலை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அவர், அத்தகைய தகவல் அவருக்குக் கொடுத்துதவப்படும் சாத்தியமில்லையென அபிப்பிராயப்படுமிடத்து அல்லது அத்தகைய தகவல் ஒடுக்கப்படுமென அஞ்சுமிடத்து, அவருக்குத் தேவைப்பட்ட அத்தகைய தகவலுக்காகத் தேடுகையிட்டு அதனைப் பெறுவதற்கு அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு எழுத்தில் அதிகார மளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அதிகாரவளிப்பு, அத்தகைய நோக்கத்துக்காக வைத்திருக்கப்பட்டுப் பேணப்பட்ட இடாப்பில் பதியப்படுதலும் வேண்டும்.

(2) இந்நியதிச்சட்டத்தின்கீழான ஏதேனும் தகவலை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் மாகாணப் பதிவாளரினால் அவ்வாறு விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், அவசியமாயின், சமாதான அலுவலருடன் சேர்ந்து செல்லலாம் என்பதுடன், பின்வரும் செயல்கள் எல்லா வற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் செய்யலாம்.

(அ) எவரேனும் ஆளுக்கு அல்லது குழுவுக்குச் சொந்தமான எவையேனும் புத்தகங்கள், இடாப்புகள் அல்லது வேறு ஆவணங்கள் காணப்படக்கூடுமென அவர் நம்புவதற்குக் காரணமுள்ள ஏதேனும் கட்டிடத்தினுள் அல்லது இடத்தினுள் பிரவேசித்துத் தேடுகையிடுதலும், அத்தகைய எவையேனும் புத்தகங்களை, இடாப்புகளை அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்தலும் அல்லது பரிசோதனை செய்வித்தலும்;

(ஆ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது இடத்தைத் தேடுகையிடும்போது காணப்படக்கூடிய ஏதேனும் புத்தகம், இடாப்பு அல்லது வேறு ஆவணம் பற்றிய குறிப்பைச் செய்தலும் அல்லது பொருட்பதி வேட்டைத் தயாரித்தலும் அல்லது அதிலிருந்தான பிரித்தெடுத்த பகுதியை எடுத்தலும்;

(இ) இந்நியதிச்சட்டத்திற்கு இயைபானதாகவுள்ள அல்லது இதன்கீழான ஏதேனும் கருமம் தொடர்பாக அக்கட்டிடத்தில் அல்லது இடத்தில் அவர் காணும் எவரேனும் ஆளை இந்நியதிச்சட்டத்திற்கு இயைபான அல்லது இதன்கீழான ஏதேனும் கருமம் தொடர்பாக வினவுதலும்; அத்துடன், தேடுகை யிடுதல்கள் தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழான தேடுகையிடுதல்களுக்கு அந்த அளவுவரை ஏற்புடையனவாதலும் வேண்டும்;

(ஈ) ஏதேனும் கட்டிடத்தின் அல்லது இடத்தின் ஏதேனும் தேடுகையிடுகையின்போது காணப்படக்கூடிய அத்தகைய எவையேனும் புத்தகங்களை, இடாப்புகளை அல்லது வேறு ஆவணங்களை எடுத்துச் செல்லுதலும், அவை எந்த ஆளின் கட்டுக்காப்பிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டனவோ அந்த ஆளுக்கு அவற்றுக்கான பற்றுச்சீட்டை வழங்குதலும், தாமதமின்றி, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இடாப்பில் அத்தகைய புத்தகங்களின், இடாப்புகளின், அல்லது வேறு ஆவணங்களின் விபரங்களைப் பதிதலும்.

(3) ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் காண்பிக்கும்படி மாகாணப் பதிவாளரினால் அல்லது மாகாணப் பதிவாளரினால் எழுத்தில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்வதற்குத் தவறுகின்ற, அல்லது முற்போந்த ஏற்பாடுகளின் கீழான பரிசோதனையைச் செய்வதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அதனை அனுமதிப்பதற்குத் தவறுகின்ற ஏதேனும் குழுமம், அல்லது ஆள், கூட்டுத்தாபனம், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் முகவர், பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர், அத்தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென்று, அல்லது அத்தகைய தவறு புரியப்படு வதனைத் தவிர்ப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்று அவர் எண்பித்தாலொழிய, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அத்தகைய தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் கூட்டிணைப்புக் குழுவொன்றாகவிருக்குமிடத்து, அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைப்புக் குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவராகவிருந்த ஆளொவ்வொருவரும் அத்தவறுக்குக் குற்ற வாளியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

32. (1) எவரேனுமாள், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களின் கொடுப்பனவின்மீது மாகாணப் பதிவாளரினால் கோப்பிடப்பட்ட ஆவணங்களை பரிசோதனையிடலாம்.

பதிவுசெய்யப்பட்ட கூற்றுக்களை பரி சோதனையிடுத லும் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதலும்.

(2) எவரேனுமாள், ஏதேனும் குழுமத்தின் அல்லது ஆளின் பதிவுச் சான்றிதழ், அல்லது விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவத்தில் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றின் பிரதி அல்லது அதிலிருந்தான பிரித்தெடுத்த பகுதி மாகாணப் பதிவாளரினால் சான்றுப்படுத்தப்படுவதனைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய சான்றிதழுக்காக, சான்றுப்படுத்தப்பட்ட பிரதிக்காக அல்லது பிரித்தெடுத்த பகுதிக்காக, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்கள் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) பதிவுச் சான்றிதழ், அல்லது இந்நியதிச்சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கூற்றின் பிரதி அல்லது அதிலிருந்தான பிரித்தெடுத்த பகுதி, மாகாணப் பதிவாளரின் கைப்பட்ட உண்மைப்பிரதியென முறையாகச் சான்றுப்படுத்தப்படின், (அவர் மாகாணப் பதிவாளராகவுள்ளார் என்பதை எண்பிப்பது அவசியமாதலாகாது), எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் சட்ட வழக்கு நடவடிக்கைகளிலும் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இடாப்பின் ஏதேனும் சேதப் படுத்தப்பட்ட தொகுதிகளின், கோப்பின் அல்லது ஆவணத்தின் பிரதிகளை எடுப் பதற்கும், மீள வமைக்கப்பட்ட பக்கங்களைத் தயாரிப்பதற்கும் உட்புகுத்துவதற்கு மான தத்துவம்.

33. (1) இந்நியதிச்சட்டத்தின்கீழ் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் இடாப்பின் ஏதேனும் தொகுதி, அல்லது ஏதேனும் கோப்பு அல்லது ஆவணம், அதனைச் சீர்ப்படுத்துவதனை இயலாததாக்கும் வகையில் அவ்வாறு சேதப் படுத்தப்பட்டுள்ளதென மாகாணப் பதிவாளர் திருப்திப்படுமிடத்து, அவர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அதன் பிரதியொன்று தயாரிக்கப்பட்டு மெய்யென்று உறுதிப்படுத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டு மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட ஏதேனும் பிரதி, அது எந்தத் தொகுதியின் அல்லது பக்கத்தின் அல்லது ஆவணங்களின் பிரதியாகவுள்ளதோ அந்தத் தொகுதியை அல்லது பக்கத்தை அல்லது ஆவணங்களை மாற்றீடு செய்தல் வேண்டுமென்பதுடன், எல்லா நோக்கங் களுக்காகவும், அத்தகைய பிரதி எந்தத் தொகுதியை அல்லது கோப்பை அல்லது ஆவணங்களை மாற்றீடு செய்கின்றதோ அந்தத் தொகுதியை அல்லது கோப்பை அல்லது ஆவணத்தைப் போன்று அதே சட்ட வலுவையும் பயனையும் கொண்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) மாகாணப் பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தச் சேதப்படுத்தப்பட்ட தொகுதியின், கோப்பின் அல்லது ஆவணத்தின் பிரதி தயாரிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சேதப்படுத்தப்பட்ட தொகுதி, கோப்பு அல்லது ஆவணம் ஒவ்வொன்றும், அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் குறிப்பீட்டுக்காக நியாயமான முறையில் செயல்முறைக்குகந்ததாகவிருக்கும் காலம்வரை பேணிக்காக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(4) ஏதேனும் இடாப்பினது ஏதேனும் தொகுதியின் ஏதேனும் பக்கம் அல்லது ஏதேனும் கோப்பு காணாமற் போய்விட்டதுடன் மீட்டெடுக்க முடியாதுள்ளது என்றும் அல்லது அதன்கண்ணுள்ள பதிவுகளை அல்லது ஏதேனும் முக்கிய பாகத்தை வாசிக்கத்தக்கதாகவிராததாக்கும் வகையில் அத்தகைய பக்கம் நிரந்தரமாகச் சிதைக்கப்பட்டுள்ளது அல்லது அவ்வாறு அழிக்கப்பட்டுள்ளது அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாகாணப் பதிவாளர் முறையான நுண்ணாய்வுகளின் பின்னர் திருப்திப்படுமிடத்து, மீள வமைக்கப்பட்ட பக்கமொன்று தயாரிக்கப்படுவதனை அவர் செய்விக்கலாம்.

(5) பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்கின்ற ஒழுங்குவிதிகளுக்கிணங்கவன்றி (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பக்கமெதுவும் மீளவமைக்கப்படுதலாகாது:

(அ) காணாமற்போன அல்லது சிதைந்துபோன அல்லது சேதப்படுத்தப்பட்ட பக்கத்தில், தொடக்கத்தில் அடங்கியுள்ள விபரங்களை நிச்சயிப்பதில் மாகாணப் பதிவாளரினால் சான்று ஏற்கப்பட்டுப் பயன் படுத்தப்படுதல்;

(ஆ) மீளவமைக்கப்பட்ட பக்கத்தின் தயாரிப்புப்பற்றி மாகாணப் பதிவாளரினால் அறிவித்தல் கொடுக்கப்படுதல்;

(இ) மீளவமைக்கப்பட்ட பக்கத்தில் அடங்கியுள்ள எவையேனும் விபரங்களினால் பாதிக்கப்பட்ட எவரேனு மாளினால் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படுதல்; அத்துடன்

(ஈ) மாகாணப் பதிவாளரினால் அத்தகைய எவையேனும் ஆட்சேபனைகள் பற்றி விசாரணை செய்யப்படுதல்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க மாகாணப் பதிவாளரினால் ஏதேனும் பக்கம் மீளவமைக்கப் பட்டுள்ளவிடத்து, மாகாணப் பதிவாளர், மீளவமைக்கப்பட்ட பக்கத்தை விதித்துரைக்கப்பட்ட முறையில் மெய்யென்று உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர், விடயத்துக்கேற்ப, காணாமற்

போன பக்கம் முன்னரிருந்த இடத்தில், அல்லது சிதைக்கப்பட்டுள்ள அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ள பக்கத்துக்குப் பதிலாக, அல்லது மீளவமைக்கப்பட்ட பக்கமானது இடாப்பின் தோதான தொகுதியின் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தயாரிக்கப்பட்டவொரு தொகுதியின் பிரதியில் உட்புகுத்தப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்; அத்துடன் மீளவமைக்கப்பட்ட பக்கம் அவ்வாறு மெய்யென்று உறுதிப்படுத்தப் பட்டு உட்புகுத்தப்படும்போது, எல்லா நோக்கங்களுக்காகவும், அப்பக்கமானது எந்த மீளவமைக்கப்பட்ட பக்கத்தை மாற்றீடு செய்கின்றதோ அந்த மீளவமைக்கப்பட்ட பக்கத்தைப்போன்று அதே சட்டவலுவையும் பயனையும் கொண்டிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(7) மாகாணப் பதிவாளர், அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னர், இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைத்திருக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் இடாப்பில் அல்லது ஏதேனும் சான்றிதழில், கோப்பில் அல்லது ஆவணத்தில் உள்ள ஏதேனும் பதிவில் கண்டுபிடிக் கப்படக்கூடிய ஏதேனும் எழுதும்போது விடப்படும் பிழையை அல்லது விட்டுவிடுகையைத் திருத்தலா மென்பதுடன், அந்நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் சான்றிதழை மீளப்பெற்று அதனைத் திருத்தலாம் அல்லது அதன் இடத்தில் புதியவொரு சான்றிதழை வழங்கலாம்.

34. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொடுக்கப்படுவதற்கு அல்லது சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப் படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல், எழுத்திலான தொடர்பாடல், சான்றிதழ் அல்லது வேறு ஆவணம், அது எவ்வாளுக்கு முகவரியிடப்பட்டுள்ளதோ அவ்வாளின் பதிவுசெய்யப்பட்ட பிரதான வியாபார இடத்துக்கு மாகாணப் பதிவாளரினால் அஞ்சலிலிடப்படின், முறையாகக் கொடுக்கப்பட்டுள்ளதாக அல்லது சேர்ப்பிக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். *அறிவித்தலைச் சேர்ப்பித்தல்.*

35. மாகாணப் பதிவாளரினால் (அவர் மாகாணப் பதிவாளராகவுள்ளாரென்பதை எண்பிப்பது அவசிய மாதலாகாது) முறையாகச் சான்றுப்படுத்தப்பட்டனவாக அல்லது இந்நியதிச்சட்டத்தின்கீழ் மாகாண வியாபாரப் பெயர்கள் பதிவாளரின் அலுவலகத்தில் கோப்பிடப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட எவை யேனும் ஆவணங்களிலிருந்தான, இடாப்புக்களிலிருந்தான அல்லது வேறு புத்தகங்களிலிருந்தான அச்சிடப் பட்ட, பொறிமுறையில், இலத்திரனியல் முறையில் அல்லது வேறுவகையாகத் தயாரிக்கப்பட்ட, தட்டச்சிடப்பட்ட அல்லது எழுத்திலான பிரதிகள் அல்லது பிரித்தெடுத்த பகுதிகள், மேலதிக எண்பிப்பின்றி அல்லது மூலப் பிரதிகளைக் காண்பிக்காமல் வட மாகாணத்தினுள்ளான எல்லா நீதிமன்றங்களிலும் எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும் சான்றாக ஏற்கப்படுதல் வேண்டும். *சான்றுப்படுத்தப் பட்ட பிரதிகள் சான்றாதல் வேண்டும்.*

36. (1) மாகாணப் பதிவாளர், தகுதியானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக் கமைய, அவரது தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளுள் அத்தகையவற்றை அலுவலரொருவருக்குக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர் அவருக்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அத்தகைய தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம். *தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும் கையளித்தல்.*

(2) மாகாணப் பதிவாளர், அலுவலரொருவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தோதானதென அவர் கருதும்போதெல்லாம் அவ்வாறு செய்யலாம்.

37. அமைச்சர் அவசியமெனக் கருதக்கூடியவாறாக இந்நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் மாகாணப் பதிவாளர் அவரது பணிகளைப் புரிதல், அவரது கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் அவரது தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றி, இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத அத்தகைய பணிப்புகளை அமைச்சர் அவருக்கு விடுக்கலாமென்பதுடன், மாகாணப் பணிப்பாளர் அத்தகைய எல்லாப் பணிப்புகளுக்கும் பயன்கொடுத்தலும் வேண்டும். *பணிப்புகள்.*

38. (1) பின்வரும் கருமங்களுள் எவை சம்பந்தமாகவும் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்:- *ஒழுங்கு விதிகள்.*

(அ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் மாகாணப் பதிவாளருக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஆ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள்;

(இ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் மாகாணப் பதிவாளரின் தத்துவங்களும் கடமைகளும்;

(ஈ) மாகாணப் பதிவாளரினால் புரியப்படுவதற்கு இந்நியதிச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட நியதிச் சட்டங்களைப் புரிதல்;

(உ) பயன்படுத்தப்படக்கூடிய வியாபாரப் பெயர் பற்றிய மட்டுப்பாடுகள் சம்பந்தமான அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற எல்லாக் கருமங்களும்;

(ஊ) பக்கங்களை மீளவமைத்தல்; அத்துடன்

(எ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான எல்லாக் கருமங்களும், பொதுவாக இந்நியதிச்சட்டத்தின்கீழ் பதிவை நடாத்துதலும் ஒழுங்குபடுத்துதலும் மற்றும் அவற்றின் இடைநேர்விளைவான எவையேனும் கருமங்களும்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட எல்லா ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் வட மாகாண சபையின் முன்னர் இடப்படுதலும் வட மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

(3) வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படவேண்டிய திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

மாகாணப் பதிவாளரினால் தற்றுணிபுசார் தத்துவம் பிரயோகிக்கப்படுதல்.

39. நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் மாகாணப் பதிவாளருக்கு ஏதேனும் தற்றுணிபுசார் தத்துவம் அளிக்கப்படுமிடத்து, அவர், அதன்மூலம் பாதிக்கப்பட்ட திறத்தவருக்குக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளிக்காமல், அத்தகைய திறத்தவருக்குப் பாதகமான முறையில் அத்தத்துவத்தைப் பிரயோகித்தலாகாது.

எழுதும்போது விடப்பட்ட பிழைகளைத் திருத்துதல்.

40. மாகாணப் பதிவாளர், அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னர், ஏதேனும் பதிவுச் சான்றிதழில் அல்லது இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவரினால் வைத்திருக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட இடாப்பிலுள்ள ஏதேனும் பதிவுப் பதிவீட்டில் காலத்துக்குக்காலம் கண்டுபிடிக்கப்படக்கூடிய எழுதும்போதுவிடப்பட்ட ஏதேனும் பிழையைத் திருத்தலாம்.

மாகாணப் பதிவாளர்கள் பகிரங்க சேவையாளர்களாக விருத்தல் வேண்டும்.

41. மாகாணப் பதிவாளர் அல்லது அப்போதைக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள், அவர் பதவிவகிக்கும் காலம்வரை தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

இடாப்புகள் முதலியவற்றைப் பேணுதல்.

42. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைத்திருக்கப்பட்டுப் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா இடாப்புகளும் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலுமுள்ள அந்தந்தப் பதிவு அலுவலகங்களில் மாகாணப் பதிவாளரின் மேற்பார்வையின்கீழ் வைத்திருக்கப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.

பொருள்கேடல்.

43. இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

"வியாபாரம்" என்பது, ஏதேனும் வர்த்தகத்தையும் அல்லது உயர்தொழிலையும் உள்ளடக்கும்;

"வியாபாரப் பெயர்" என்பது, ஏதேனும் வியாபாரம், பங்காண்மையிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, எந்தப் பெயரின்கீழ் அல்லது மகுடத்தின்கீழ் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்தப் பெயர் அல்லது மகுடம் என்று பொருளாகும்;

"கூட்டுத்தாபனம்" என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்புக்குழு என்று பொருளாகுமென்பதுடன், கம்பெனிகள் தொடர்பான சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான கம்பெனியொன்றையும் உள்ளடக்கும்;

"பணிப்பாளர்" மற்றும் "செயலாளர்" என்பன, எத்தகையதுமான எப்பெயரினாலும் அழைக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது செயலாளர் என்ற பதவியை வகிக்கின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

"குழுமம்" என்பது, இலாபங்களுக்காக வியாபாரம் கொண்டுநடாத்தும் கருத்துடன் ஒருவரோடொருவர் பங்காண்மையைச் செய்துகொண்டுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களை, அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுத் தாபனங்களையும், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுத்தாபனங்களையும் கொண்டுள்ள கூட்டிணைக்கப்படாதவொரு குழு என்று பொருளாகும்;

"முழுப்பெயர்" என்பது, தகப்பனின் பெயர் அல்லது வேறு இறுதிப் பெயர் முழுமையாகக் காணப்படுகின்றதும், அதில் முற்போந்த பெயர்கள், ஒன்றில் முழுமையாகக் காணப்படுகின்றதும் அல்லது முதலெழுத்துக்களினால் குறிப்பீடு செய்யப்படுகின்றதுமான ஏதேனும் விடயத்தையும் உள்ளடக்கும்;

"தனியாள்" என்பது, இயற்கை ஆளொருவர் என்று பொருளாகுமென்பதுடன், ஒரு கூட்டுத்தபானத்தை உள்ளடக்காது;

"ஆள்" என்பது, ஒரு கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, மாகாண வர்த்தகம் மற்றும் வாணிப விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரைக் குறிக்கும்.

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இந்நியதிச்சட்டத்தைப் பின்பற்றிய ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் பட்ட என்று பொருளாகும்.

44. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட எல்லாப் பதிவுச் சான்றிதழ்களும், இந்நியதிச் சட்டத்தின்கீழ் புதிய பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்வரை செல்லுபடியுள்ளனவாகவும் பயனுள்ளனவாகவும் தொடர்ந்திருத்தல் வேண்டும். பேணல்கள்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொடுத்துதவப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களை அல்லது இந்நியதிச் சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னர் 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவாளருக்கு அளிக்கப்பட்ட விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தைக் கொண்டுள்ள எழுத்திலான ஒவ்வொரு கூற்றும் செல்லுபடியுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டு மென்பதுடன், விபரங்களைக் கொடுத்துதவுதல், விபரங்களிலான மாற்றம், விதித்துரைக்கப்பட்ட கட்டணங் களின் கொடுப்பனவு, பதிவும் சான்றிதழ்களை வழங்குதலும் என்பன தொடர்பாக இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஒவ்வொரு கூற்றுக்கும் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் இடாப்பு, சுட்டி அல்லது ஆவணம், இந்நியதிச்சட்டத்தின் கீழ் வைத்திருக்கப்பட்ட இடாப்பின், சுட்டியின் அல்லது ஆவணங்களின் பாகமாக இருந்துள்ளதாக அல்லது இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னரானவொரு திகதியன்று நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எல்லா வழக்கு நடவடிக்கைகளும், 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கேட்டு முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

45. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இந்நியதிச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின்கீழ் மாகாணப் பதிவாளர் திணைக்களம் தாபிக்கப்பட்டு மாகாணப் பதிவாளர் நியமிக்கப்படும்வரை, மாகாண அரசிறைத் திணைக்களமும் மாகாண அரசிறை ஆணையாளரும் முறையே திணைக்களத்தினதும் மாகாணப் பதிவாளரினதும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும். நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

46. இந்நியதிச்சட்டத்தின் தமிழ் மற்றும் சிங்கள உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

3 - 336